# 4. இயேசுவை மேசியா என்று சொன்ன சாட்சிகள்

**இந்த வாரப் பாடத்தின் சாட்சிகள்**

1. யோவான் ஸ்நானன்
2. அந்திரேயா-யோவான்
3. பிலிப்பு-நாத்தான்வேல்
4. நிக்கொதேமு

பாப் வெபர் சொன்ன நாய்க் கதை. செய்தித்தாள் போடும் பையன். நாய்க்குட்டிகள் விற்கப்படும். 25 டாலர்.

பிள்ளைகள் மாம்சத்தையும் இரத்தத்தையும் உடையவர்களாயிருக்க, அவரும் அவர்களைப்போல மாம்சத்தையும் இரத்தத்தையும் உடையவரானார்.

## 1. மேசியா

### மேசியா எனும் வார்த்தையின் அர்த்தம் என்ன?

**மேசியா என்றால், அபிஷேகம் பண்ணப்பட்டவர் என்று அர்த்தம்.**

### எந்தப் பதவிக்கெல்லாம் அபிஷேகம் பண்ணினார்கள்?

ஆரோனுக்குப் பரிசுத்த வஸ்திரங்களை உடுத்தி, எனக்கு ஆசாரிய ஊழியம் செய்யும்படிக்கு அவனை அபிஷேகம் பண்ணி, அவனைப் பரிசுத்தப்படுத்துவாயாக. யாத்திராகமம் 40:13. ஆசாரியன்.

யெகூவை இஸ்ரவேலின்மேல் ராஜாவாக அபிஷேகம்பண்ணி, எலிசாவை தீர்க்கதரிசியாக அபிஷேகம்பண்ணு. 1இராஜாக்கள் 19:16, ராஜா, தீர்க்கதரிசி.

மேசியா எனப்படுகிறவர் ஓர் ஆசாரியனாக இருக்கலாம்; ஒரு ராஜாவாக இருக்கலாம்; அல்லது ஒரு தீர்க்கதரிசி யாக இருக்கலாம்.

சேனைகளின் கர்த்தர் உரைக்கிறது என்னவென்றால், இதோ, ஒரு புருஷன், அவருடைய நாமம் கிளை என்னப் படும். சகரியா 6:12.

அவரே கர்த்தருடைய ஆலயத்தைக் கட்டுவார்; அவர் தம்முடைய சிங்காசனத்தின்மேல் வீற்றிருந்து ஆளுகைசெய் வார்; தம்முடைய சிங்காசனத்தின்மேல் ஆசாரியராயும் இருப்பார்; இவ்விரண்டின் நடுவாகச் சமாதானத்தின் ஆலோசனை விளங்கும். சகரியா 6:13.

### இஸ்ரவேலரின் எதிர்பார்ப்பு எப்படி இருந்தது?

தங்கள் தேவனாகிய கர்த்தரையும், நான் தங்களுக்கு எழுப்பப்போகிற தங்கள் ராஜாவாகிய தாவீதையுமே சே விப்பார்கள். எரேமியா 30:9. கர்த்தராகிய நான் அவர்களுக்குத் தேவனாக இருப்பேன், என் தாசனாகிய தாவீது அவர்கள் நடுவில் அதிபதியாயிருப்பார். எசேக்கியேல் 34:24.

தான் விரும்புவதைப் பார்க்கிற மனது. யூதர்களின் பாரம்பரியம் ஆபிரகாமில் துவங்குகிறது; அதனால் தனித்து□ வமான பல அனுகூலங்களைப் பெற்றிருந்தார்கள். அது தன்னில்தானே போதுமானதா? ரோமர் 3:2. யூதனுடைய மேன்மை என்ன?

தம்முடைய சிங்காசனத்தின்மேல் வீற்றிருந்து ஆளுகை செய்வார்; தம்முடைய சிங்காசனத்தின் மேல் ஆசாரியரா யும் இருப்பார். சகரியா 6:13. நீங்கள் உங்கள் தேவனாகிய கர்த்தரின் சத்தத்தைக்கேட்டு நடந்தீர்களானால் இது நிறைவேறும். சகரியா 6:15; எரே 18:1-10

தேவன் சொன்ன நிபந்தனையை யூதர்கள் மறந்துவிட்டதால், இந்த ஆளுகை அவர்களுக்கு நிறைவேறப்போவ தில்லை.

### சகரியா சொன்ன கிளை எனப்படும் ஆசாரிய–ராஜா என்ன செய்வார்?

**பாடுபடும் மேசியா**

அவருடைய நாமம் கிளை என்னப்படும். சகரியா 6:12.

இளங்கிளையைப்போல எழும்புகிறார். ஏசாயா 53:2.

நம்முடைய மீறுதல்களினிமித்தம் அவர் காயப்பட்டு, நம்முடைய அக்கிரமங்களினிமித்தம் அவர் நொறுக்கப்பட்□ டார்; நமக்குச் சமாதானத்தை உண்டுபண்ணும் ஆக்கினை அவர்மேல் வந்தது; அவருடைய தழும்புகளால் குணமா கிறோம். ஏசாயா 53:5.

அவருடைய நாமம் கிளை என்னப்படும். அவரே கர்த்தருடைய ஆலயத்தைக் கட்டுவார். சகரியா 6:12.

### இவர் கட்டுகிற ஆலயம் எப்படிப்பட்டது?

அவர்மேல் மாளிகை முழுவதும் இசைவாய் இணைக்கப்பட்டு, கர்த்தருக்குள் பரிசுத்த ஆலயமாக எழும்புகிறது. எபேசியர் 2:21. கிறிஸ்தவ சபை.

யாக்கோபின் கோத்திரங்களை எழுப்பவும், இஸ்ரவேலில் காக்கப்பட்டவர் களைத் திருப்பவும், நீர் எனக்குத் தாச னாயிருப்பது அற்பகாரியமாய் இருக்கிறது; நீர் பூமியின் கடைசிபரியந்தமும் என்னுடைய இரட்சிப்பாய் இருக்கும் படி, உம்மை ஜாதிகளுக்கு ஒளியாகவும் வைப்பேன் என்கிறார். ஏசாயா 49:6.

கர்த்தர்(பிதா) என் ஆண்டவரை(இயேசுவை) நோக்கி: நான் உம்முடைய சத்துருக்களை உமக்குப் பாதபடியாக்கிப் போடும்வரைக்கும், நீர் என்னுடைய வலதுபாரிசத்தில் உட்காரும் என்றார். சங்கீதம் 110:1.

கர்த்தர்(பிதா) சீயோனிலிருந்து உமது(இயேசுவுடைய) வல்லமையின் செங்கோலை அனுப்புவார்; நீர் (இயேசு) உம்முடைய (இயேசுவுடைய) சத்துருக்களின் நடுவே ஆளுகைசெய்யும். சங்கீதம் 110:2.

### இயேசு என் வாழ்வில் கிறிஸ்துவாக இருக்கிறாரா?

ஆசாரியர், ராஜா, தீர்க்கதரிசி.

## 2. யோவான் ஸ்நானனின் சாட்சி

எருசலேமிலிருந்து யூதர்கள் ஆசாரியரையும் லேவியரையும் யோவானிடத்தில் அனுப்பி: நீர் யார் என்று கேட்□டபொழுது, யோவான் ஸ்நானன் சொன்ன பதில் என்ன?

அவன் மறுதலியாமல் அறிக்கையிட்டதுமன்றி, நான் கிறிஸ்து அல்ல என்றும் அறிக்கையிட்டான். யோவான் 1:20.

அதற்கு அவன்: கர்த்தருக்கு வழியைச் செவ்வைபண்ணுங்கள் என்று ஏசாயா தீர்க்கதரிசி சொன்னபடியே, நான் வனாந்தரத்திலே கூப்பிடுகிறவனுடைய சத்தமாயிருக்கிறேன் என்றான். யோவான் 1:23.

யோவான் அவர்களுக்குப் பிரதியுத்தரமாக: நான் ஜலத்தினாலே ஞானஸ்நானங்கொடுக்கிறேன்; நீங்கள் அறியாதிருக்கிற ஒருவர் உங்கள் நடுவிலே நிற்கிறார். யோவான் 1:26.

அவர் எனக்குப் பின்வந்தும் என்னிலும் மேன்மையுள்ளவர்; அவருடைய பாதரட்சையின் வாரை அவிழ்ப்பதற்கும் நான் பாத்திரனல்ல என்றான். யோவான் 1:27.

**மேண்டேயன்ஸ், எபியனைட்ஸ், நசரீன்ஸ்**

### யோவான் செய்த அதே ஊழியத்தை, நாம் எவ்வாறு செய்யவேண்டும்?

### இன்றைய கிறிஸ்தவ ஊழியம் எப்படி இருக்கிறது?

ஒருவன் நான் பவுலைச் சேர்ந்தவனென்றும், வேறொருவன் நான் அப்பொல்லோவைச் சேர்ந்தவனென்றும் சொல்லுகிறபடியால் நீங்கள் மாம்சத்திற்குரியவர்களல்லவா? 1கொரிந்தியர் 3:4.

## 3. தேவ ஆட்டுக்குட்டி

### இயேசு யாரென்று யோவான் ஸ்நானன் சொன்னார்?

மறுநாளிலே யோவான் இயேசுவைத் தன்னிடத்தில் வரக்கண்டு: இதோ, உலகத்தின் பாவத்தைச் சுமந்துதீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டி. யோவான் 1:29

நாமெல்லாரும் ஆடுகளைப்போல வழிதப்பித்திரிந்து, அவனவன் தன்தன் வழியிலே போனோம்; கர்த்தரோ நம்மெல்லாருடைய அக்கிரமத்தையும் அவர்மேல் விழப்பண்ணினார். அடிக்கப்படும்படி கொண்டுபோகப்படுகிற ஒரு ஆட்டுக் குட்டியைப்போல, அவர் தம்முடைய வாயைத் திறவாதிருந்தார். ஏசாயா 53:6,7.

பஸ்கா, பலிமுறைகள்.

### இயேசுவைப்பற்றிய என்ன நிழலை யோவான் ஸ்நானன் சுட்டிக்காட்டினார்?

எனக்குப்பின் ஒருவர் வருகிறார், அவர் எனக்கு முன்னிருந்தபடியால் என்னிலும் மேன்மையுள்ளவரென்று நான் சொன்னேனே, அவர் இவர்தான். நானும் இவரை அறியாதிருந்தேன்; இவர் இஸ்ரவேலுக்கு வெளிப்படும்பொருட்டாக, நான் ஜலத்தினாலே ஞானஸ்நானங் கொடுக்க வந்தேன் என்றான். யோவான் 1:30,31.

அந்தப்படியே நான் கண்டு, இவரே தேவனுடைய குமாரன் என்று சாட்சி கொடுத்து வருகிறேன் என்றான். யோவான் 1:34.

யோவான் ஸ்நானனிடம் இயேசுவைப்பற்றி யோவான் ஸ்நானனுடைய சீடர்கள் என்ன சொன்னார்கள் அதற்கு யோவான் ஸ்நானன் என்ன பதில் சொன்னார்?

அவர்கள் யோவானிடத்தில் வந்து: ரபீ, உம்முடனேகூட யோர்தானுக்கு அக்கரையில் ஒருவர் இருந்தாரே; அவரைக் குறித்து நீரும் சாட்சிகொடுத்தீரே, இதோ, அவர் ஞானஸ்நானங்கொடுக்கிறார், எல்லாரும் அவரிடத்தில் போகிறார்கள் என்றார்கள். யோவான் 3:26.

நான் கிறிஸ்துவல்ல, அவருக்கு முன்னாக அனுப்பப்பட்டவன் என்று நான் சொன்னதற்கு நீங்களே சாட்சிகள். யோவான் 3:28.

மணவாட்டியை உடையவனே மணவாளன்; மணவாளனுடைய தோழனோ அருகே நின்று, அவருடைய சொல்லைக் கேட்கிறவனாய் மணவாளனுடைய சத்தத்தைக் குறித்து மிகவும் சந்தோஷப்படுகிறான்; இந்தச் சந்தோஷம் இப்பொழுது எனக்குச் சம்பூரணமாயிற்று. யோவான் 3:29.

அவர் பெருகவும் நான் சிறுகவும் வேண்டும். யோவான் 3:30

**யோவான் ஸ்நானன் இயேசுவுக்கு வழியை ஆயத்தம்பண்ணும்படி வந்தார். அவரது ஊழியம், மனித கண்ணோட்டத்தில் எவ்வளவு தூரம் வெற்றிகரமாக இருந்தது? எதை வெற்றி எனக் கருதுகிறோம்?**

பூமியிலிருந்துண்டானவன் பூமியின் தன்மையுள்ளவனாயிருந்து, பூமிக்கடுத்தவைகளைப் பேசுகிறான்; பரலோகத்திலிருந்து வருகிறவர் எல்லாரிலும் மேலானவர். யோவான் 3:31.

தேவனால் அனுப்பப்பட்டவர் தேவனுடைய வார்த்தைகளைப் பேசுகிறார், தேவன் அவருக்குத் தமது ஆவியை அளவில்லாமல் கொடுத்திருக்கிறார். யோவான் 3:34.

# 4. யோவானின் இரண்டு சீடர்கள்

## யோவானின் சீடர்கள் அவரைவிட்டு வேறே எங்கே சென்றார்கள்?

மறுநாளிலே யோவானும் அவனுடைய சீஷரில் இரண்டுபேரும் நிற்கும்போது, இயேசு நடந்துபோகிறதை அவன் கண்டு: இதோ, தேவ ஆட்டுக்குட்டி என்றான். யோவான் 1:35,36.

அவன் அப்படிச் சொன்னதை அவ்விரண்டு சீஷருங்கேட்டு, இயேசுவுக்குப் பின்சென்றார்கள். யோவான் 1:37.

இயேசு திரும்பி, அவர்கள் பின்செல்லுகிறதைக் கண்டு: என்ன தேடுகிறீர்கள் என்றார். அதற்கு அவர்கள்: ரபீ, நீர் எங்கே தங்கியிருக்கிறீர் என்று கேட்டார்கள். யோவான் 1:38.

அவர்: வந்து பாருங்கள் என்றார். அவர்கள் வந்து அவர் தங்கியிருந்த இடத்தைக் கண்டு, அன்றையத்தினம் அவரிடத்தில் தங்கினார்கள். அப்பொழுது ஏறக்குறையப் பத்துமணி வேளையாயிருந்தது. யோவான் 1:39.

## அந்த இரண்டு சீஷர்கள் யார்? அவர்களில் ஒருவர் என்ன செய்தார்?

யோவான் சொன்னதைக் கேட்டு, அவருக்குப் பின்சென்ற இரண்டுபேரில் ஒருவன் சீமோன் பேதுருவின் சகோதரனாகிய அந்திரேயா என்பவன். அவன் முதலாவது தன் சகோதரனாகிய சீமோனைக் கண்டு: மேசியாவைக் கண்டோம் என்று சொன்னான்; மேசியா என்பதற்குக் கிறிஸ்து என்று அர்த்தமாம். யோவான் 1:40,41.

பின்பு, அவனை இயேசுவினிடத்தில் கூட்டிக்கொண்டுவந்தான். இயேசு அவனைப் பார்த்து: நீ யோனாவின் மகனாகிய சீமோன், நீ கேபா என்னப்படுவாய் என்றார்; கேபா என்பதற்குப் பேதுரு என்று அர்த்தமாம். யோவான் 1:42.

## இயேசுவுக்கு கேபாவை ஏற்கனவே தெரியும். எப்படி?

பிதாவானவர் செய்யக் குமாரன் காண்கிறதெதுவோ, அதையேயன்றி, வேறொன்றையும் தாமாய்ச் செய்யமாட்டார்; அவர் எவைகளைச் செய்கிறாரோ, அவைகளைக் குமாரனும் அந்தப்படியே செய்கிறார். யோவான் 5:19.

பிதாவானவர் குமாரனிடத்தில் அன்பாயிருந்து, தாம் செய்கிறவைகளையெல்லாம் அவருக்குக் காண்பிக்கிறார்; நீங் கள் ஆச்சரியப்படத்தக்கதாக இவைகளைப் பார்க்கிலும் பெரிதான கிரியைகளையும் அவருக்குக் காண்பிப்பார். யோவான் 5:20.

# 5. பிலிப்பு, நாத்தான்வேல்

## பிலிப்புவின் யார்? அவருடைய ஊர் எது?

மறுநாளிலே இயேசு கலிலேயாவுக்குப்போக மனதாயிருந்து, பிலிப்புவைக்கண்டு: நீ எனக்குப் பின்சென்று வா என்றார். பிலிப்பென்பவன் அந்திரேயா பேதுரு என்பவர்களுடைய ஊராகிய பெத்சாயிதா பட்டணத்தான். யோவான் 1:44.

பிலிப்பு நாத்தான்வேலைக் கண்டு: நியாயப்பிரமாணத்திலே மோசேயும் தீர்க்கதரிசிகளும் எழுதியிருக்கிறவரைக் கண்டோம்; அவர் யோசேப்பின் குமாரனும் நாசரேத்தூரானுமாகிய இயேசுவே என்றான். யோவான் 1:45.

அதற்கு நாத்தான்வேல்: நாசரேத்திலிருந்து யாதொரு நன்மை உண்டாகக்கூடுமா என்றான். அதற்குப் பிலிப்பு: வந்து பார் என்றான். யோவான் 1:46

இயேசு நாத்தான்வேலைத் தம்மிடத்தில் வரக்கண்டு அவனைக்குறித்து: இதோ, கபடற்ற உத்தம இஸ்ரவேலன் என்றார். யோவான் 1:47.

## நாத்தான்வேல் இயேசுவைப்பற்றிச் சொன்ன அறிக்கை என்ன?

அதற்கு நாத்தான்வேல்: நீர் என்னை எப்படி அறிவீர் என்றான். இயேசு அவனை நோக்கி: பிலிப்பு உன்னை அழைக்கிறதற்கு முன்னே, நீ அத்திமரத்தின் கீழிருக்கும்போது உன்னைக் கண்டேன் என்றார். யோவான் 1:48.

அதற்கு நாத்தான்வேல்: ரபீ, நீர் தேவனுடைய குமாரன், நீர் இஸ்ரவேலின் ராஜா என்றான். யோவான் 1:49.

இயேசு அவனுக்குப் பிரதியுத்தரமாக: அத்திமரத்தின் கீழே உன்னைக் கண்டேன் என்று நான் உனக்குச் சொன்னதினாலேயா விசுவாசிக்கிறாய்; இதிலும் பெரிதானவைகளைக் காண்பாய் என்றார். யோவான் 1:50.

பின்னும், அவர் அவனை நோக்கி: வானம் திறந்திருக்கிறதையும், தேவதூதர்கள் மனுஷகுமாரனிடத்திலிருந்து ஏறுகிறதையும் இறங்குகிறதையும் நீங்கள் இதுமுதல் காண்பீர்கள் என்று மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார். யோவான் 1:51.

# 6. நிக்கொதேமு

யூதருக்குள்ளே அதிகாரியான நிக்கொதேமு என்னப்பட்ட பரிசேயன் என்ன செய்தார்? இயேசுவுக்கு அவரை எப்படித் தெரியும்?

அவன் இராக்காலத்திலே இயேசுவினிடத்தில் வந்து: ரபீ, நீர் தேவனிடத்திலிருந்து வந்த போதகர் என்று அறிந்திருக்கிறோம், ஏனெனில் ஒருவனும் தன்னுடனே தேவன் இராவிட்டால் நீர் செய்கிற இப்படிப்பட்ட அற்புதங்களைச் செய்யமாட்டான் என்றான். யோவா 3:2.

இயேசு அவனுக்குப் பிரதியுத்தரமாக: ஒருவன் மறுபடியும் பிறவாவிட்டால் தேவனுடைய ராஜ்யத்தைக் காணமாட்டான் என்று மெய்யாகவே மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன் என்றார். யோவான் 3:3.

அதற்கு நிக்கொதேமு: ஒரு மனுஷன் முதிர்வயதாயிருக்கையில் எப்படிப் பிறப்பான்? அவன் தன் தாயின் கர்ப்பத்தில் இரண்டாந்தரம் பிரவேசித்துப் பிறக்கக்கூடுமோ என்றான். யோவான் 3:4.

இயேசு பிரதியுத்தரமாக: ஒருவன் ஜலத்தினாலும் ஆவியினாலும் பிறவாவிட்டால் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்கமாட்டான் என்று மெய்யாகவே மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன். யோவான் 3:5.

இயேசு அவனை நோக்கி: நீ இஸ்ரவேலில் போதகனாயிருந்தும் இவைகளை அறியாமலிருக்கிறாயா? யோவான் 3:10.

பொல்லாங்கு செய்கிற எவனும் ஒளியைப் பகைக்கிறான், தன் கிரியைகள் கண்டிக்கப்படாதபடிக்கு, ஒளியினிடத்தில் வராதிருக்கிறான். யோவான் 3:20.

சத்தியத்தின்படி செய்கிறவனோ தன் கிரியைகள் தேவனுக்குள்ளாய்ச் செய்யப்படுகிறதென்று வெளியாகும்படிக்கு, ஒளியினிடத்தில் வருகிறான் என்றார். யோவான் 3:21.

தேவனால் அனுப்பப்பட்டவர் தேவனுடைய வார்த்தைகளைப் பேசுகிறார், தேவன் அவருக்குத் தமது ஆவியை அளவில்லாமல் கொடுத்திருக்கிறார். யோவான் 3:34.

**ஆவியானவரின் நடத்துதலை நாம் எப்போது ஏற்றுக்கொள்வோம்? நம் புரிதல் மாற வேண்டும்.**

*ஆலிவர் சாக்ஸ் எனும் நரம்பியல் நிபுணர் தனது புத்தகத்தில் வெர்ஜில் எனும் நபரைப்பற்றிச் சொல்கிறார். கண்தெரியாமல் இருந்த ஒருவருக்குப் பார்வை கிடைக்கும்போது, பார்த்தலின் இனிமையை அவர் அனுபவிக்கவேண்டு மானால், தனது முந்தைய வாழ்க்கைக்குச் செத்து, புதிதாகப் பிறக்கவேண்டும்.*